
**தமிழ் மாநில ஜமாஅத்துல் உலமா பேரவை**

வெளியீடு

# முஸ்லிம்களின் மணிமகுடம்

# தொப்பி



முதல் பதிப்பு ஆகஸ்ட் 2003

தொகுப்பு :

**மௌலவீ K.A. நிஜாமுத்தீன் மன்பயீ**

பொதுச்செயலாளர், தமிழ் மாநில ஜமாஅத்துல் உலமா பேரவை

30 ஆகஸ்ட் 2003

சென்னை

# முன்னுரை

1, ரஜப் 1424

இஸ்லாமிய வாழ்வியல் முறைகள் அனைத்தும் மனித வாழ்வுக்கு உயர்வையும் பெருமையையும் சேர்ப்பதாகும். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சொல்லித்தந்த நடை, உடை, பாவனை அனைத்துமே மனிதனை கௌரவத்துடன் தலைநிமிர்ந்து வாழச் செய்பவையாகும். அத்தகைய செயல்களில் ஒன்று ஆண்கள் தொப்பியணிவது.

கடந்த பல ஆண்டுகளாக உலகம் முழுவதும் பிற சமயத்தவரைப் பார்த்துக் காப்பியடித்து நாகரீகம், அறிவியல் முன்னேற்றம் என்ற பெயரால் முஸ்லிம்களின் பெரும்பாலானவர்கள் தொப்பியில்லாமலேயே வாழ்ந்துவருகிற பழக்கம் இருந்து வருகிறது. இது முற்றிலும் தவறானதும் முஸ்லிம்களின் கண்ணியத்தை வீழ்ச்சியடையச் செய்வதுமாகும். அந்த வீழ்ச்சியை இக்காலத்தில் கண்கூடாகக் கண்டுவருகிறோம்.

இன்று முஸ்லிம்களில் சரியான மார்க்க விளக்கமில்லாத சிலர் இன்னும் ஒருபடி மேலேபோய் தொழும் பொழுது தொப்பியணிய வேண்டியதில்லை என்று கூறி, தொப்பியணியாமல் தொழுது பள்ளிகளில் குழப்பங்கள் செய்துவருகின்றனர். தொழும் பொழுது தொப்பி போடக்கூடாது என்பதற்கு ஒரு சிறு ஆதாரங்கூட குர்ஆனிலோ ஹதீஸ்களிலோ கிடையாது.

அவர்கள் சொல்வதும், செய்வதும் தவறு என்பதைப் பொதுமக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், அவர்களும் திருந்திடலாம் என்ற நன்நோக்கத்திலும் இச்சிறுபிரசுரம் தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமாசபை சார்பாக வெளியிடப்படுகிறது.

இதில் எழுதப்பட்டிருக்கும் செய்திகள் மார்க்கத்தில் ஆதாரப்பூர்வமானவைதாம் என்பதற்கு தமிழ்நாட்டின் முக்கியமான சில அரபிக் கல்லூரிகளின் சட்ட மேதைகளான முதல்வர்கள் மற்றும் பேராசிரியர்களின் தீர்ப்புகளும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. நல்வழி நாடுவோருக்கு ஒரு சொல் போதுமானது.

அல்லாஹுதஆலா அனைவரையும் நேர்வழி நடத்திட போதுமானவன்.

மௌலவீ, அல்ஹாஜ்
**A.E.M. அப்துர்ரஹ்மான் ஹஜ்ரத்**
தலைவர்

இஸ்லாமிய ஊழியன்
**K.A. நிஜாமுத்தீன்**
பொதுச்செயலாளர்

**தமிழ்மாநில ஜமாஅத்துல் உலமா பேரவை**



## அல் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் அரபிக்கல்லூரி - வேலூர்

முஸ்லிம்கள் தொப்பி தலைப்பாகை அணியவேண்டும் என்பதற்காக பல்வேறு ஆதாரங்களைத் தொகுத்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். தொப்பி மற்றும் தலைப்பாகை அணிவது இஸ்லாமின் ஆரம்பகாலந்தொட்டே நடைமுறையில் இருந்து வந்துள்ளது என்பதை ஹதீஸ்களும் முன்னோர்களின் நடைமுறைகளும் நமக்கு எடுத்துரைக்கின்றன.

தொப்பி அணிவது முஸ்லிம்களை விட்டுப் பிரித்துப்பார்க்க முடியாத அடையாளச் சின்னம் என்பதும் முஸ்லிம்களின் ஒற்றுமைக்கு அது ஓர் வெளிப்படையான அறிவிப்புச்சின்னம் என்பதும் மறுக்க முடியாத உண்மை. அதிலும் குறிப்பாக தொப்பி அணிந்து தொழுவது முஸ்லிம்களின் எல்லாத் துறையினராலும் எல்லாப் பகுதியினராலும் எல்லாக் காலங்களிலுமே ஒப்புக் கொள்ளப்பட்டு, இடையீடின்றி இன்று வரை கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறையாகும்.

தொப்பி அணிவதற்குத்தான் ஆதாரம் இருக்கிறதே தவிர, தொப்பி அணியாதிருப்பதற்கு ஆதாரம் இல்லை. அது மட்டுமின்றி அதற்கான ஆதாரம் எதையும் எவராலும் காண்பிக்க முடியாது என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ளவேண்டும். எனவே முஸ்லிம்கள் அனைவரும் தொப்பி அணிவதை- குறிப்பாக தொப்பி அணிந்து தொழும் வழக்கத்தை- பேணி நடப்பது அவசியமாகும். இதனை மாற்ற முயற்சிப்பதும் பிரச்சாரம் செய்வதும் மிகவும் கண்டிக்கத்தக்காகும்.

பள்ளிவாசல்களில் தொப்பி போடாமல் தொழுவது சமுதாய ஒற்றுமையைக் குலைக்கும் சமூகவிரோதச் செயலாகும். இவ்வாறு சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டு, குழப்பத்தை விளைவிப் போரைச் சட்டரீதியாகத் தடுத்து நிறுத்த ஜமாஅத் நிருவாகிகள் அனைவருக்கும் முழு உரிமை உண்டு.

எனவே, தொழும் பொழுது தொப்பி அணிவது சம்பந்தமாக மௌலானா நிஜாமுத்தீன் மன்பயீ அவர்கள் எழுதியிருப்பது இன்றைய காலத்திற்கு மிக அவசியமானதாகும்.

மௌலானா, முஃப்தீ உஸ்மான் முஹ்யித்தீன் ஹஜ்ரத் - முதல்வர்
மௌலானா முஹம்மது கமாலுத்தீன் ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா ஜைனுல் ஆபிதீன் ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா சதக்கத்துல்லாஹ் ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா அப்துல் ஹமீது ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா முஹம்மது இல்யாஸ் ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா முஹம்மது ஸலீம் ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா ஷஃபீக் அஹ்மது ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா முஹம்மது இக்பால் ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா மஹ்மூதுல் ஹஸன் ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா முஹம்மது முஸ்தபா ஹஜ்ரத் - பேராசிரியர்

## ஜாமிஆ மன்பவுல் அன்வார் - லால்பேட்டை

தொழும்போது தொப்பி அணிந்து தொழுவதின் அவசியத்தைப் பற்றி ஆதாரப்பூர்வமான நபி மொழியிலிருந்தும் ஃபிக்ஹ்கலை ஆதார நூற்களிலிருந்தும் தாங்கள் எடுத்தெழுதியுள்ள விஷயங்களை ஆய்வு செய்தோம்; மிகச் சரியாக உள்ளது.

மௌலானா, அல்ஹாஜ்
**A.E.M. அப்துர் ரஹ்மான் ஹஜ்ரத்**
பேராசிரியர்

மௌலானா, அல்ஹாஜ்
**முஹம்மது ஜகரிய்யா ஹஜ்ரத்**
முதல்வர், மன்பவுல் அன்வார்
அரபிக் கல்லூரி, லால்பேட்டை.

மௌலானா, அல்ஹாஜ்
**நூருல் அமீன் ஹஜ்ரத்**
பேராசிரியர்



## ஜாமிஆ அன்வாருல் உலூம் - திருச்சி

தொழுகையில் தொப்பி என்ற தலைப்பில் தொப்பி அணிவது சம்பந்தமாக ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களைக் கொண்டும், முஸ்லிம் என்று சொன்னாலே அவர் தொப்பி அணிந்திருப்பார் என்று முஸ்லிம் அல்லாதவர்களும் கருதுவார்கள் என்பதைக் கொண்டும் மிக அழகிய முறையில் சுருக்கமான வகையில் தெளிவாகத் தாங்கள் எழுதியுள்ளதைக் கண்டு நானும் கல்லூரிப் பேராசிரியர்களும் மகிழ்ச்சியடைந்தோம். அல்லாஹு தஆலா உங்களுக்கு நற்கூலி கொடுப்பானாக!

மௌலானா காரீ உபைதுல்லாஹ் ஹஜ்ரத் - முதல்வர்
மௌலானா முஹம்மது ரூஹுல் ஹக் ஹஜ்ரத் - துணைமுதல்வர்
மௌலானா பத்ருத்தீன் ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா இப்றாஹீம் அத்ஹம் ஹஜ்ரத் பேராசிரியர்
மௌலானா முஹம்மது ஹஸன் ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா ராஜ் முஹம்மது ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா முஹம்மது முபாரக் அலீ ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா அப்துல்லதீப் ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா முஹம்மது அலி ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா ஷைகு ஷஃபீஉத்தீன் ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா முஹம்மது ஜலாலுத்தீன் ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா முஹம்மது காஸிம் ஹஜ்ரத் - பேராசிரியர்
மௌலானா அப்துல் கய்யூம் ஹஜ்ரத் - பேராசிரியர்

## மத்ரஸா மழாஹிருல் உலூம் - சேலம்

தொப்பிபற்றிய கட்டுரையை (படிக்க) நான் கேட்டேன். முஸ்லிம் சமுதாய இளைஞர்களைச் சீரிய நல்வழியில் கொண்டுவரும் தங்களின் முயற்சிக்கு நான் வல்ல அல்லாஹ்விடம் துஆச் செய்கிறேன்.

**முஹம்மது ஷபீக் கான்**
*நிறுவனர் மற்றும் முதல்வர் மளாஹிருல் உலூம் அரபிக் கல்லூரி*

## யூசுஃபிய்யா அரபிக் கல்லூரி - திண்டுக்கல்

‘அபூதாவூது’ கிரந்தத்தில் 728ஆம் ஹதீஸில் தொழுகையின் ஆரம்பத்தில் எதுவரை கைகளை உயர்த்துவது என்ற பாடத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும், ஸஹாபாக்களும் தொப்பி அணிந்திருந்தார்கள் என்று வாஇல் பின் ஹுஜ்ரு (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். *நூல் : அபூதாவூது, ஹதீஸ் : 728*

இவ்வாறே ‘நஸஈ’யிலும் வாஇல்பின் ஹுஜ்ரு (ரலி) அவர்களின் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ள ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் தொப்பியணிந்திருந்ததாகக் கூறுகிறார்கள்.

*நூல் : நஸஈ, ஹதீஸ் 1160*

புகாரீ ஷரீபின் 384ஆவது ஹதீஸில், ஸஹாபாக்கள் தங்கள் தலைப்பாகையின் மீதும் தொப்பியின் மீதும் ஸஜ்தாச் செய்வார்கள் என ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

*நூல் : புகாரீ, ஹதீஸ் 384*

முஸ்னத் அஹ்மதில் ஸஹாபாக்கள் தொப்பியணிந் திருந்ததாக ஒரு சம்பவமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

*நூல் : முஸ்னது அஹ்மது, ஹதீஸ் : 5176*

ஷுஹதாக்களுக்கு சொர்க்கத்தில் வழங்கப்படும் உயர்ந்த பதவியைத் தெரியப்படுத்துவதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்கள் தலையை உயர்த்திய பொழுது அன்னாரின் தலையிலிருந்து தொப்பி கீழே விழுந்தது.

*திர்மிதீ, ஹதீஸ் : 1644*

தொழும்பொழுது மட்டுமல்ல, எல்லா நேரங்களிலும் தொப்பி அணிவது நபி வழி என்பதை இந்தச் சில ஹதீஸ்கள் தெரிவிக்கின்றன.

நபிகளார் (ஸல்) அவர்களோ ஸஹாபாக்களோ தலை திறந்த நிலையில் தொழுததாக எங்குமே கூறப்படவில்லை. இந்நிலையில் இந்த விஷயத்தை எடுத்துக் கொண்டு பெருங்குழப்பங்களை உண்டு பண்ணிக் கொண்டிருப்பது மாபெரும் குற்றமாகும்.

மௌலானா நிஜாமுத்தீன் ஹஜ்ரத் எழுதியுள்ள இப்பிரசுரம் தொப்பி அணிவது சம்பந்தமான உண்மைகளைத் தெளிவாக விளக்குகிறது. அனைவரும் படித்துத் தெளிவு பெறக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு

மௌலானா, அல்ஹாஜ் **அ. கலீல் அஹ்மது கீரனூரி,**

முதல்வர், யூசுஃபிய்யா அரபிக் கல்லூரி, திண்டுக்கல்.



## மத்ரஸா காஷிஃபுல் ஹுதா - சென்னை

தொப்பி அணிந்து தொழுவது நாயகம் (ஸல்) அவர்களின் வழிமுறை என்று குர்ஆன் ஹதீஸ் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது. புகாரீ ஷரீபிலும் நாயகம் (ஸல்) அவர்களும் சங்கை மிக்க ஸஹாபாக்கள் மற்றும் முன்னோர்கள் தொப்பி, தலைப் பாகையுடன் தொழுததாக வந்திருக்கிறது. *புகாரீ 1:56, மற்றும் 1:159*

தொப்பி அணிவதும் தலையை மறைப்பதும் இஸ்லாமிய ஆடையில் கட்டுப்பட்டதாகும். அது தனிச் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் பெற்றிருக்கிறது. தலை திறந்த நிலையில் மக்களுக்கு முன் செல்வது ஒழுக்கக்கேடான செயல் என்று “தல்பீஸே இப்லீஸ்” என்ற நூலில் இமாம் இப்னு ஜவ்ஸீ (ரஹ்) அவர்கள் எழுதியுள்ளார்கள்.

தொப்பி அணியாமல் தலையைத்திறந்த நிலையில் மக்களுக்கு முன் திரிவதே மக்ரூஹ் என்பதாக, ஒழுக்கக் கேடாக இருக்கும்போது, தொழுகை போன்ற முக்கியம் வாய்ந்த வணக்கத்தில் தலையைத்திறந்திருப்பது எந்த அளவு ஒழுக்கக் கேடும் கெடுதியும் உள்ளது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தலையைத் திறந்திருப்பது யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்ற சமுகத்தார்கள் ஆகியோரின் நடைமுறையாகும்.

எனவே, தொழும் பொழுது தொப்பி அணிவது சம்பந்தமாக மௌலானா நிஜாமுத்தீன் ஸாஹிப் மன்பயீ அவர்கள் எழுதியிருப்பது ஷரீஅத் சட்டத்திற்கு உட்பட்டது தான் என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

மௌலானா, முஃப்தீ
**அபுல் ஹஸன் ஹஜ்ரத் காஸிமீ**
பேராசிரியர், காஷிபுல் ஹுதா

மௌலானா, அல்ஹாஜ்
**முஹம்மது யஃகூப் ஹஜ்ரத்**
முதல்வர், காஷிபுல் ஹுதா அரபிக் கல்லூரி,
சென்னை.

## ஜாமிஆ மிஸ்பாஹுல் ஹுதா - நீடூர்

முஸ்லிம்கள் தொப்பியணிவது (குறிப்பாகத் தொழுகையில் தொப்பியணிவது) சம்பந்தமாக மௌலானா கே.ஏ. நிஜாமுத்தீன் ஹஜ்ரத் அவர்களால் எழுதப்பட்டு தமிழ் மாநில ஜமாஅத்துல் உலமா சபை சார்பாக வெளியிடப்படும் இத்தொகுப்பு ஷரீஅத்திற்கு உட்பட்ட மிக நல்ல தொகுப்பாகும். செய்திகள் ஆதாரப்பூர்வமானவை.

| | |
|---|---|
| மௌலானா **முஹம்மது இஸ்மாயீல் ஹஜ்ரத்** | - முதல்வர் |
| மௌலானா **அப்துல்ஹஸன் ஹஜ்ரத்** | - பேராசிரியர் |
| மௌலானா **முஹம்மது சுலைமான் பாஷா ஹஜ்ரத்** | - பேராசிரியர் |
| மௌலானா **அப்துர்ரஹ்மான் ஹஜ்ரத்** | - பேராசிரியர் |
| மௌலானா **பரக்கத்அலி ஹஜ்ரத்** | - பேராசிரியர் |
| மௌலானா **பக்ருத்தீன் ஹஜ்ரத்** | - பேராசிரியர் |
| மௌலானா **அப்துல்ஹாதி ஹஜ்ரத்** | - பேராசிரியர் |

## மத்ரஸா அஸ்ஸிராஜுல் முனீர் - திருப்பூர்

தொப்பி முஸ்லிம்களின் அடையாளம் என்று உலக மக்களுக்கு விளங்கியுள்ளது, இவர்களுக்கு விளங்காதது ஆச்சரியந்தான்.

குர்ஆன் ஆயத்துக்களையும் ஹதீஸ்களையும் ஆதாரமாகக் குறிப்பிட்டுச் சிறப்பாகவும் விளக்கமாகவும் எழுதியுள்ளீர்கள். அல்லாஹ் அனைவருக்கும் நேர்வழிகாட்டுவானாக!

மௌலானா, அல்ஹாஜ்
**முஹம்மது ஹஜ்ரத்**
முதல்வர், அஸ்ஸிராஜுல் முனீர்
அரபிக்கல்லூரி, திருப்பூர்



## தாவூதிய்யா அரபிக்கல்லூரி - ஈரோடு

தொப்பியணிதல் பற்றிய தங்களின் பிரசுரம் பொது மக்களுக்கு உண்டாகும் அனைத்து சந்தேகங்களையும் குழப்பங்களையும் தீர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

நபி மொழி, நபிவழி மற்றும் நாயகத் தோழர்களின் நடைமுறை ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு எளிய முறையில் தெளிவான நடையில் இந்த ஆக்கம் அமைந்துள்ளது. பொதுமக்கள் படித்துப் பயன்பெற வேண்டுமெனக்கேட்டுக்கொள்கிறோம்.

| | |
|---|---|
| மௌலானா **உமர் பாருக் தாவூதி ஹஜ்ரத்** | - முதல்வர் |
| மௌலானா **சித்தீக் அலி பாகவி ஹஜ்ரத்** | - பேராசிரியர் |
| மௌலானா **அப்துல் காதிர் தாவூதீ ஹஜ்ரத்** | - பேராசிரியர் |
| மௌலானா **ஜியாவுத்தீன் தாவூதீ ஹஜ்ரத்** | - பேராசிரியர் |
| மௌலானா **முஹம்மது சுல்தான் ஹஜ்ரத்** | - பேராசிரியர் |
| மௌலானா **பீர் முஹம்மது ரஷாதீ ஹஜ்ரத்** | - பேராசிரியர் |
| மௌலானா **நஸ்ருல்லாஹ் ரஷாதீ ஹஜ்ரத்** | - பேராசிரியர் |
| மௌலானா **முஹம்மது ரஃபீ தாவூதீ ஹஜ்ரத்** | - பேராசிரியர் |
| மௌலானா **முஹம்மது யூசுப் தாவூதீ ஹஜ்ரத்** | - பேராசிரியர் |
| மௌலானா **அல்தாப் ஹுஸைன் தாவூதீ ஹஜ்ரத்** | - பேராசிரியர் |

### அன்பார்ந்த சகோதரர்களே!

தொப்பி சம்பந்தமாக எழுதப்பட்டுள்ள இச்சிறு பிரசுரத்தை முஸ்லிம்கள் அனைவரும்-குறிப்பாக இளைஞர்கள்-படித்துத் தெளிவு பெற சமுதாயத்தின் ஆர்வலர்கள் முயற்சிக்கு மாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் வசதி பெற்றவர்கள் 1000, 2000 பிரதிகள் வாங்கி, தமிழ்ப்பேசும் முஸ்லிம்கள் அனைவரும் பெற்றுப் படித்துப் பயன்பெறும் வகையில் பரவலாக விநியோகிக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

1000 பிரதிகள் 3000/– ரூபாய். வணிகர்கள் தங்களின் விளம்பரத்தைப் போடவிரும்பினால் அட்டையின் கடைசிப்பக்கத்தில் போட்டுத் தந்திடலாம். ஆனால், 1000 பிரதிகளுக்குக் குறைவாக விளம்பரம் போட்டுத் தர இயலாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

*தொடர்பு முகவரி:* **K.A. நிஜாமுத்தீன்** 49, பொன்னப்ப தெரு,
புரசைவாக்கம், சென்னை – 600 084.
**போன் : 26427371**

# முஸ்லிம்களின் மணிமகுடம் தொப்பி

சமீப காலமாக இஸ்லாமிய வாலிபர்களில் சிலர் இஸ்லாமியக் கடமைகளான ஈமான், தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ்ஜு போன்றவற்றிலும் ஹலால், ஹராம் ஆகியவற்றிலும் இஸ்லாமிய வரலாறுகளிலும் நடைமுறைச் செயல்பாடுகளிலும் இஸ்லாமிய ஷரீஅத்திற்கும் குர்ஆன் ஹதீஸுக்கும் மாற்றமான கருத்துக் களைக் கூறி மக்களை வழி கெடுத்து வருகின்றனர்.

அவர்களுடைய தவறான பல கருத்துக்களில் ஒன்று தொழும்பொழுது தொப்பியணிய வேண்டியதில்லை என்பது. இதனால், அக்குழுவைச் சேர்ந்தவர்கள் மஸ்ஜிதுகளுக்கு வந்து தொப்பி அணியாமல் தொழுவதினால் தமிழ்நாட்டில் பல ஊர்களில் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக் கின்றன. சில இடங்களில் கைகலப்பு ஏற்பட்டு, ஜமாஅத்தினர் காவல் நிலையம் வரை செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

தொப்பி அணிவதற்கு குர்ஆனிலோ, ஹதீஸிலோ ஆதாரமில்லை என்று கூறி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். தொப்பி அணிய வேண்டுமென ஹதீஸ்களில் கூறப்பட்டிருப்பதாலும் அது பற்றிச் சட்ட கிரந்தங்களில் எழுதப்பட்டிருப்பதாலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸல்லம் அவர்கள் காலம் முதல் கடந்த 1400 ஆண்டுகளுக்கு மேலாக தொப்பி அணிவது உலகெங்கிலும் முஸ்லிம்களின் வழக்கமாக இருந்து வருவதாலும் தொப்பி அணிந்து தொழுவதற்கு வேறு ஆதாரம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை.

தொப்பி அணியக் கூடாது என்பதற்கு அவர்கள்தான் ஹதீஸில் ஆதாரம் காட்ட வேண்டும். அவ்வாறு அவர்கள் ஆதாரம் காட்ட முடியாது. ஏனெனில், தொழும்பொழுது



தொப்பி அணிய வேண்டியதில்லை என்று எந்த ஹதீஸும் கிடையாது. ஹதீஸில் தடை இல்லாதபொழுது தொப்பி அணிந்து தொழுவதுதான் ஒரு முஸ்லிமுக்கு அலங்காரமாகும். தொழுகையில் அலங்காரத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமெனக் குர்ஆன் (7 : 31) கூறுகிறது.

பொதுமக்கள் விளங்கிக் கொள்வதற்காக தொப்பி அணிவது பற்றி ஹதீஸ்களிலிருந்தும் ஃபிக்ஹு சட்ட நூல்களிலிருந்தும் சிலவற்றை இங்கு எழுதியுள்ளேன். பொது மக்கள் விளங்கிக் கொள்ளவும்.

وعن ركانة رضي عن النبي صلى الله عليه وسلم قال ان فرق ما بيْننا وبين المشركين

العمائم على القلانس (رواه الترمذي)

“இணைவைப்பவர்களுக்கும் நமக்குமிடையே (தலைப்பாகை அணிவதில்) வித்தியாசமாகிறது, (நாம்) தொப்பியின் மீது தலைப்பாகை அணிவதாகும்” என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

(அறிவிப்பவர் : ருகானா (ரலி), நூல் : திர்மிதி)

عن انس بن مَالِكٍ رضي أن النبى صلى الله عليه وسلم دخل عام الفتح وعلىٰ رأسه

المغفر وفى رواية عن جابِر دخل يومئذ وعليه عمامة سوداء

(صحيح البُخارى) المغفر. درع يلبس تحت القلنسوة (حاشية البخارى)

மக்கா நகர வெற்றியின் போது மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் தலையில் (மிஃபர் எனப்படும்) கவசம் அணிந்தவர்களாகச் சென்றார்கள்.

(அறிவிப்பவர் : அனஸ் (ரலி) நூல் : புகாரி)

‘மிஃபர்’ என்பது தொப்பிக்குக் கீழ் அணியப்படும் ஒரு வகைத் தலைக்கவசம்.

ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கும் மற்றோர் அறிவிப்பில், ‘கறுப்பு நிறத்தலைப்பாகை அணிந்தவர் களாக அன்றைய தினம் மக்காவில் நுழைந்தார்கள்’ என அறிவிக்கப்பட்டுள்ளது.

(நூல் : புகாரி)

மேற்கூறப்பட்டுள்ள ஹதீஸின் படி தொப்பியணிந்து தலைப்பாகை அணிந்திருந்தார்கள் என்றே அறியப்பட்டுள்ளது.

وعن عبد الله بن عمر ؓ أن رجلا قال يارسول الله ما يلبس المحرم من الثياب ؟ قال رسوالله ﷺ لا تلبسوا القمص ولا العمائم ولا السراويلات ولا البرانس ولا الخِفَاف الا أحد لا تجد نعلين فتلبس خفين ولتقطعهما أسفل من الكعبين

(صحيح البخاري)

"ஹஜ்ஜுக்கு இஹ்ராம் கட்டுகிறவர் எந்தத் துணிகளை அணிய வேண்டும்?" என்று ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் கேட்ட பொழுது, "சட்டை, தலைப்பாகை, கால் சட்டை, தொப்பி, காலுறை ஆகியவற்றை அணியக்கூடாது" என பதிலளித்தார்கள்.

(அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி), நூல் : புகாரி)

தொப்பி அணிந்திருக்கும் பழக்கம் அக்காலத்தில் முஸ்லிம்களிடையே இருந்து வந்ததால்தான் இஹ்ராம் அணியும் போது அதனைக் கழற்றி விடுமாறு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள் என்பதை இந்த ஹதீஸிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட அறிவிப்புகளிலிருந்து தொப்பி யின்றித் தலைப்பாகை அணிவதோ, தலைப்பாகை யின்றித் தொப்பி அணிவதோ கூடாது என்பது கருத்தல்ல.

وقال ابن القيم فى زاد المعاد : كان يلبسها (يعنى العمامة) ويلبس تحتها القلنسوة وكان يلبس القلنسوة بغير عمامة ويلبس العمامةَ بغير قلنسوةٍ (زاد المعاد)



وَفي الجامع الصَّغيرِ بِروايةِ الطَّبرِ انى عَنِ ابنِ عُمَرَ ؓ قال: كَانَ يَلبَسُ قَلَنسوَةً بيضَاءَ ـ وَفيه بِرِوَايةِ الرَّوُياني وَابْنِ عَسَاكِرِ عَنِ ابْنِ عبَّاسٍ ؓ كَانَ يَلبَسُ القَلاَنِسَ تحتَ الْعَمَائِمِ وبِغَيرُ العَمَائِم ـ وَيَلبَسُ الْعَمَائِمَ بِغَيرِ القلنسوة وَكَانَ يلبس القَلاَنِسَ اليَماَ نِيَّةَ ـ

(تحفة الاحوذى بشرح جامع الترمذى)

அல்லாமா இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள் ஜாதுல் மஆத் என்ற நூலில் எழுதியுள்ளதாவது : ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொப்பியணிந்து அதன் மேல் தலைப்பாகை அணிந்திருந்தார்கள். மேலும் தலைப்பாகையின்றி தொப்பி (மட்டும்) அணிபவர்களாகவும் தொப்பியின்றித் தலைப்பாகை மட்டும் அணிபவர்களாகவும் இருந்தார்கள்.

ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு உமர் (ரலி) அவர்கள் வாயிலாக தப்ரானீயில் அறிவிக்கப்பட்டிருப்பதாக ஜாமிஉஸ் ஸகீர் என்ற கிரந்தத்தில் எழுதப் பட்டுள்ளதாவது: நபி (ஸல்) அவர்கள் வெள்ளை நிறத் தொப்பி அணிந்திருந்தார்கள்.

அதே ஜாமிஉஸ்ஸகீரில் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளதாவது: நபி (ஸல்) அவர்கள் தலைப்பாகைக்குக் கீழ் தொப்பியணிந்தும், தலைப்பாகையின்றி தொப்பி மட்டும் அணிந்தும் தொப்பியின்றித் தலைப்பாகை மட்டும் அணிந்தும் இருந்து வந்தார்கள். மேலும் ரஸூலுல்லாஹி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யமன் நாட்டுத் தொப்பியையும் அணிபவர்களாக இருந்தார்கள்.

(நூல் : திர்மிதீ விரிவுரை துஹ்பதுல் அஹ்வதீ)

حَدَّثَنَا مُعْتَمِر قَالَ سَمِعتُ اَبِي قَالَ رَ أيْتُ عَلىٰ أنَسٍ بُرْنُسًا أصْفَرَ مِنْ خَزٍّ (صحيح البخاري)

“பட்டும் கம்பளி நூலும் கலந்து செய்யப்பட்ட மஞ்சள் நிறத் தொப்பி ஒன்றை அனஸ் (ரலி) அவர்கள் அணிந்திருக்கக் கண்டேன்” என முஃதமர் என்பார் தம்முடைய தந்தை தமக்குச் சொன்னதாக நம்மிடம் அறிவித்தார்.

(நூல் : புகாரீ)

மேற்கூறப்பட்ட ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ள ‘புர்னுஸ்’ என்ற வார்த்தைக்கு ( اَلْبُرْنُسُ : قَلَنْسُوَةٌ طَوِيْلَةٌ ) ‘நீளமான தொப்பி’ எனப்பொருள் செய்யப்பட்டுள்ளது. முன்ஜித் என்ற அரபி அகராதியில், “இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் முஸ்லிம்களால் அணியப்பட்டு வந்த தொப்பி” என்று பொருள் கூறப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்டுள்ள இரண்டு பொருள்களும் ‘லிஸானுல் அரப்’ என்ற பேரகராதியிலும் எழுதப்பட்டுள்ளது.

முஸ்லிம் என்றாலே தொப்பியணிந்திருப்பார் என்பது அகராதிகளில் குறிப்பிடப்படும் அளவுக்கு பிரபலமானது.

سَقَطَ الْبُرْنُسُ عَنْ رَأْسِي ‘என் தலையிலிருந்து தொப்பி விழுந்து விட்டது’ (லிஸானுல் அரப் பேரகராதி) என ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறியுள்ள ஒரு வாசகத்திலும் ‘புர்னுஸ்’ என்ற வார்த்தை கூறப்பட்டுள்ளது.



இம்மாதிரியான தொப்பியை ஸஹாபாக்களிலும் தாபியீன்களிலும் பலர் அணிந்திருந்ததாக ஸஹீஹ் புகாரியின் விரிவுரை ‘உம்தத்துல் காரீ’ என்ற கிரந்தத்தில் எழுதியுள்ளார்கள்.

மேற்கூறப்பட்ட ஹதீஸ்கள், விளக்கவுரைகள் அனைத்தையும் ஆய்வு செய்து சட்ட மேதைகளான இமாம்கள் கூறுவதாவது : சோம்பலின் காரணமாத் தலையைத் திறந்து கொண்டு தொழுவது மக்ரூஹ் (வெறுக்கத்தக்கது) ஆகும். தொப்பியணிவதை அலட்சியமாகக் கருதி வேண்டுமென்றே தொப்பி அணியாமல் தொழுவது குஃப்ராக (இறையருட் கொடையை நிராகரிப்பதாக)க் கருதப்படும். பொதுவாக اِسْتِخْفَافُ السُّنَّةِ كُفْرٌ “சுன்னத்தான செயலை அலட்சியம் செய்வது குஃப்ர்” என்பது மார்க்க மேதைகளின் தீர்ப்பாகும். தொழும் போது தொப்பி கீழே விழுந்து விட்டால் அதனை (அதிகச் செயலில்லாமல்) எடுத்துப் போட்டுக்கொள்வதே சிறந்தது.

சட்ட நூல் : ரத்துல் முஹ்தார்.

இவ்வாறே சாப்பிடும் போதும் சிறுநீர் மற்றும் மலம் கழிக்கும் போதும் தொப்பியில்லாமல் (தலையை மறைக்காமல்) இருப்பதும் மக்ரூஹ் ஆகும்.

(ரத்துல் முஹ்தார்.)

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய ஆட்சியில் பைத்துல் முகத்தஸ் முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்பட்டபோது, அங்கிருந்த கிறிஸ்தவ அதிகாரிகளிடம் ஓர் ஒப்பந்தம் எழுதி வாங்கினார்கள். அதில் இஸ்லாமிய ஆட்சிக்கு உட்பட்டு அவர்கள் வாழ வேண்டும் என்று எழுதப்பட்ட பல நிபந்தனைகளில்,

وَلَا نَتَشَبَّهُ بِهِمْ فِي شَيْءٍ من مَلاَبِسِهِمْ فِي قَلَنْسُوَةٍ وَلَا عِمامَةٍ وَلَا نَعْلَينِ وَلَا فَرْقِ شَعْرٍ وَلَا نَتَكَلَّمُ بِكَلَامِهِم .... الخ

(تفسير ابن كثير ٢:٣٤٨)

"நாங்கள் முஸ்லிம்களைப் போன்று உடைகள் அணிய மாட்டோம்; தொப்பி அணிய மாட்டோம்; தலைப்பாகை அணியமாட்டோம்; காலணிகள் அணியமாட்டோம்' என்ற நிபந்தனைகளும் எழுதப்பட்டிருந்தன.

**ஸூரா தவ்பா 29ஆம் வசனத்தின் விரிவுரையில்...**

*தஃப்ஸீர் இப்னுகஸீர் (2:348)*

தொப்பி அணியும் பழக்கம் ஸஹாபாக்களின் காலத்திலேயே முஸ்லிம்களிடம் இருந்தது என இந்நிகழ்ச்சியில் நன்கு விளங்குகிறது.

### மற்றொரு ஹதீஸை கவனியுங்கள் :

حدثنا قُتيبةُ، حدثنا ابنُ لَهِيعَةَ عن عَطَاءِ بنِ دِينَارٍ عن أبى يَزِيدَ الخَوْلانى انه سَمِعَ فَضالة بن عُبيدٍ يقولُ سمعتُ عمرَبن الخطابى يقول سمعتُ رسولَ اللّه ﷺ يقولُ : الشُّهَدَاءُ أربَعةُ : رَجُلَ مُؤمِنُ جَيّدُ الايمَانِ لَقِيَ العَدُوَّ فَصَدَّقَ اللّهَ حتى قُتِل. فَذاک الَّذِى يَرفَعُ الناسُ اليهِ أعيُنَهُم يومَ القِيَامَةِ هٰكَذَا، وَرَفَعَ رَأسَهُ حتى وَقَعَت قَلَنسُوَتُهُ، فلا أدرِي قَلَنسُوَةَ عُمَر أرَادَ أم قَلَنسُوَةَ النبى ﷺ

(ابواب فضائل الجهاد / باب ٣١ / ح ١٦٩٥)



"ஜிஹாதில் உயிரிழந்த ஷஹீதுகள் நான்கு வகையினர். முதலாமவர், உறுதிபடைத்த ஈமானுள்ளவர். அவர் அல்லாஹ்வை உண்மைப்படுத்தி, போர்க்களத்தில் எதிரியைச் சந்தித்தார். அவர் அங்கு எதிரிகளால் ஷஹீதாக்கப்பட்டார். (சுவனத்தில் உயர்ந்த அந்தஸ்திலுள்ள) இவரை மற்ற மனிதர்கள் பார்க்கும் போது இப்படிப்பார்ப்பார்கள்" என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்கள் தலையை உயர்த்தி அண்ணாந்து பார்த்தார்கள். அவர்கள் தொப்பி கீழே விழுந்துவிட்டது. அது உமருடைய தொப்பியா? அல்லது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தொப்பியா? என எனக்குத் தெரியவில்லை என்று அறிவிப்பாளர்களில் ஒருவர் கூறுகிறார். *அறிவிப்பவர் : உமர் (ரலி) நூல் : திர்மிதீ ஹதீஸ் 1695*

தொழுகை அல்லாத நேரங்களிலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் தொப்பி அணிந்திருந்தார்கள் என்பது இந்த ஹதீஸிலிருந்து நன்கு விளங்குகிறது.

عن ابنِ مَسعُودٍ ؓ عن النبىِّ ﷺ قَالَ : كانَ عَلَى مُوسَى يَوم كَلَّمَهُ رَبُّهُ كِسَاءُ صُوفٍ وَجُبَّةُ صُوفٍ وكُمَّةُ صُوفٍ وسَرَاوِيلُ صُوفٍ، وكانَت نَعلاهُ مِن جلدِ حِمَارٍ مَيِّتٍ. رواه الترمذي ابوابُ اللباس ١٧٨٨

(الكُمَّةُ : القَلَنسُوَةُ الصَغيرةُ)

நபி மூஸா (அலை) அவர்கள் தம்முடைய ரப்பிடத்தில் (சினாய்மலையில்) வசனித்த போது கம்பளியினாலான போர்வை, ஜுப்பா, தொப்பி, காற்சட்டை ஆகியவற்றை அணிந்திருந்தார்கள். அவர்களின் காலணிகள் இறந்த

கழுதைத் தோலினால் செய்யப்பட்டிருந்தது" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னுமஸ்ஊத் (ரலி) நூல் : திர்மிதி 1788

அல்லாஹுடு தஆலாவிடம் பேசும் பொழுது மற்ற உடைகளுடன் தொப்பியும் அணிந்திருக்கிறார்கள். அவ்வாறு தொப்பியணிந்திருப்பது கண்ணியமானது என்பது தெரிவிக்கப்படுகிறது. إِنَّ أَحَدَكُمْ إِذَا صَلَّىٰ فَإِنَّهُ يُنَاجِيْ رَبَّهُ (عن ابن عمر كنز العمال) உங்களில் ஒருவர் தொழுதால் அவர் தன்னுடைய ரப்பிடத்தில் இரகசியமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்" என்ற நபி மொழிப்படி தொழுபவர் தொப்பியணிந்து கண்ணியத்துடனும் ஒழுக்கத்துடனும் தொழுவது அவசியம்.

தொழும்போழுது தொப்பியணிந்து பேணுதலாகத் தொழுவது, அத்தொழுகை நிறைவு பெறுவதற்கு அசல் காரணமாக அமைந்துள்ளது. ஒரு ஹதீஸில்,

مَنْ تَهَاوَنَ فِي الْآدَابِ حُرِمَ مِنَ السُّنَّةِ وَمَنْ تَهَاوَنَ بِالسُّنَّةِ حُرِمَ مِنَ الْوَاجِبَاتِ وَمَنْ تَهَاوَنَ بِالْوَاجِبَاتِ حُرِمَ مِنَ الْفَرَائِضِ وَمَنْ تَهَاوَنَ بِالْفَرَائِضِ حُرِمَ مِنَ الْمَعْرِفَةِ -

خطبات حكيم الاسلام

எவர் முஸ்தஹப்பான விஷயத்தைச் செய்வதில் அலட்சியம் செய்கிறாரோ அவர் சுன்னத்தான காரியங்களைச் செய்வதை விட்டும் தடுக்கப்படுவார். சுன்னத்தான காரியத்தைச் செய்வதில் அலட்சியம் செய்கிறவர் வாஜிபான காரியங்களைச் செய்வதை விட்டும் தடுக்கப்பட்டுவிடுவார். வாஜிபான காரியங்களைச் செய்வதில் அலட்சியம் செய்கிறவர் ஃபர்லான காரியங்களைச் செய்வதை விட்டும் தடுக்கப்படுவார்.



ஃபர்லான காரியங்களைச் செய்வதில் அலட்சியம் செய்கிறவர் ஞானம் பெறுவதை விட்டும் தடுக்கப்படுவார்.

*(குத்பாத் ஹகீமுல் இஸ்லாம் 3 : 279)*

ஒரு முக்கியமான நோக்கத்தை அடைவதற்குக் காரணமாக இருக்கின்ற வழிமுறைகளையும் பற்றிப்பிடித்திட வேண்டுமென இந்த ஹதீஸிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இக்கருத்தைப் பல ஹதீஸ்களின் வாயிலாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹுடு அலைஹிவஸல்லம் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

மேற்கூறப்பட்ட ஹதீஸை கவனியுங்கள்: ஒழுக்கம் நிறைந்த (முஸ்தஹப்பான) செயல்களைப் பேணுதலாகச் செய்யாதவர் சுன்னத்தான செயல்களைச் செய்ய இயலாத (பாக்கியமற்ற)வராக ஆக்கப்பட்டுவிடுவார். சுன்னத்தான செயல்களில் அலட்சியம் செய்பவர் வாஜிபான செயல்களைச் செய்ய இயலாதவராக ஆக்கப்பட்டுவிடுவார். வாஜிபான செயல்களை விட்டவர் ஃபர்லான கடமைகளைச் செய்யும் பாக்கியத்தை இழந்தவராக ஆக்கப்பட்டுவிடுவார். ஃபர்லான காரியங்களைச் செய்யாதவர் படைத்தவனை அறிந்து கொள்ளும் பாக்கிமற்றவராக ஆக்கப்பட்டுவிடுகிறார். இந்நிலையில் மனிதப் பிறப்பின் நோக்கத்தையே இழந்தவராகிவிடுகிறார்.

எனவே, இறை ஞானம் பெறக் கடமைகளை (ஃபர்ளுகளை)ச் செய்திடவேண்டும் ஃபர்ளுகள் நிரப்பம் பெற வாஜிபுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். வாஜிபுகள் நிறைவாகிட சுன்னத்தான முறைகளைச் செய்திட வேண்டும். சுன்னத்தானவை நிரப்பம்பெற முஸ்தஹப்புகளைக் கடைப்பிடித்திட வேண்டும். எனவே, ஒழுக்கத்தின் அடையாளமாகிய தொப்பியணிவது உயர்நிலை அடைவதற்கு அடிப்படைக்காரணமாகும். சிந்திப்போமாக!

**ஒரு ஃபத்வா :**

**கேள்வி** : தொப்பி அணியாமல் தலையைத் திறந்திருப்பதும் செருப்பணியாமல் வெறுங்காலால் நடந்து செல்வதும் கூடுமா?

**பதில்** : தொப்பி அல்லது தலைப்பாகை அணிவதும் காலணி அணிவதும் நபிவழி சுன்னத்தாகும். சுன்னத்திற்கு மாற்றமாக இவற்றை அணியாமலிருப்பது கெட்டதும் பழிப்பிற்குரியதுமாகும். நபி (ஸல்) அவர்கள் தொப்பி, தலைப்பாகை, காலணி ஆகியவற்றை எப்பொழுதுமே அணிந்து வந்திருக்கிறார்கள்.

தலையில் தொப்பி இல்லாமல் இன்று முஸ்லிம்கள் இருப்பது தீமையாளர்களின் அடையாளமாகும். மேலும், ஆடைகள் அல்லாஹ்வின் அருட்கொடை. அவை புவியின் தட்ப, வெப்பத்தின் தீங்குகளிலிருந்து மனிதர்களைப் பாதுகாக்கின்றன. அத்தகைய அருட்கொடையைப் பயன்படுத்தாமலிருப்பது அவற்றை நிராகரிப்பதாகக் கருதப்படும். அவ்வாறு அல்லாஹ்வின் அருட்கொடையை நிராகரிப்பது குஃப்ராகும். *நூல்: அஹ்ஸனுல் ஃபதாவா 8 : 182*

**கேள்வி** : தலையைத்திறந்து கொண்டு தொழுவது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

**பதில்** : இக்காலத்தில் தலையைத்திறந்து கொண்டு வெளியில் செல்வது ஃபேஷன் ஆகிவிட்டது. இது தீயவர்கள் தேர்ந்தெடுத்துக்கொண்ட விஷயமாகும். அல்லாமா இப்னு ஜவ்ஸீ (ரஹ்) அவர்கள் கூறுவதாவது :

ولا يـخـفٰى عـلى عَـاقِلٍ اَنَّ كَشْفَ الرّاْسَ مُستَـقْبَحُ وفيه اِسقاطُ مُرُوَّةٍ وترک ادب. (تلبيس ابليس)



தலையை திறந்திருப்பது பழிப்பிற்குரியது. அவ்வாறு செய்வதில் மனிதத் தன்மையை வீழ்ச்சியடையச் செய்வதும் ஒழுக்கக்கேடும் உள்ளது. *ஃபதாவா ரஹீமிய்யா 6 : 531*

ஹஜ்ரத் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானீ (ரஹ்) அவர்கள் தங்களுடைய 'குன்யா' என்ற கிரந்தத்தில்,

يُكْرَهُ كَشْفُ رَاْسِهِ بَيْنَ النَّاسِ (كتاب الغنـية)

மக்களுக்கு மத்தியில் தலையைத் திறந்திருப்பது மக்ரூஹ் (வெறுப்பிற்குரியது) ஆகும். என்று எழுதியுள்ளார்கள். *நூல்: குன்யா*

மேற்கூறப்பட்ட செய்தி தொழுகைக்கு வெளியே. அவ்வாறாயின் தொழுகையில் தலையை மறைக்காமல் தொழுவது பெரும் வெறுப்பிற்குரியது என்பதில் சந்தேகமில்லை. *ஃபதாவா ரஹீமிய்யா*

மேலுள்ள விளக்கங்களின் மூலம் முஸ்லிம் என்பவர் எல்லா நேரங்களிலும் தொப்பியுடன் இருப்பது, தன்னை ஒரு முஸ்லிம் என்று பிறருக்கு வெளிப்படையாக அடையாளங் காட்டுவதாகும். முன்னோர்கள் அவ்வாறே வாழ்ந்திருந்தார்கள் என்பதை வரலாறுகளின் மூலம் தெரியலாம்.

பொதுவாக ஒருவரை முஸ்லிம் என்று மற்றவர் தெரிந்து கொள்வதற்கு வெளிப்படையான அடையாளங்கள் இரண்டு. ஒன்று தாடி; மற்றொன்று தொப்பி. ஒரு முஸ்லிம் தன்னை முஸ்லிம் என்று பிறருக்கு அடையாளங் காட்டுவது கட்டாய மானதாகும்.

இக்காலத்தில் பிற சமுதாயத்தினரைப் போன்றே பெரும்பாலான முஸ்லிம்கள் தொப்பியும் தாடியும் இல்லாமலேயே வாழ்கின்ற பழக்கத்தை மேற்

கொண்டுள்ளனர். இருப்பினும் தொழுகையில் தொப்பியணிந்து தொழும் பழக்கம் எல்லா முஸ்லிம்களிடமும் இருந்து வந்தது. குறிப்பாக, தமிழ்நாட்டில் அப்பழக்கம் சிறப்பாகக் கடைப் பிடிக்கப்பட்டு வந்தது. அப்பழக்கம் இக்காலத்தில் தவறான சிந்தனை உள்ள சிலரால் பாழாக்கப்பட்டு வருகிறது. இன்னும் சிலர் நாகரீகம், அறிவியல் முன்னேற்றம் என்ற பெயரால் தொப்பியின்றியே இருந்து வருகின்றனர்.

தொழும் பொழுது தொப்பி போட வேண்டிய தில்லை என்று கூறுகிறவர்களின் தலைவராகக் கருதப்படு பவரே தொப்பியுடன் தான் காட்சி தருகிறார். அவ்வாறே அக்கட்சியிலுள்ள முக்கியமானவர்கள் தொப்பி போட்டுத்தான் வலம்வருகிறார்கள். ஆனால், தொண்டர்கள் தொப்பி போட வேண்டியதில்லை என்று சொல்லி வைத்திருப்பது வியப்பான செய்தியாகும்.

**ஒரு ஃபத்வா :**

سوال :- مردوں کو ننگے سر رہنا کیسا ہے اور شرعاً یہ فعل مردوں کا جائز ہے یا ناجائز

الجواب :- حامداً و مصلیاً

وقت ضرورت ننگے سر ہونے میں مضائقہ نہیں لیکن جو طریقہ آج کل رائج ہو رہا ہے
کہ ہر وقت ننگے سر بالوں میں تیل ڈالے ہوئے پھرتے رہتے ہیں یہ طریقہ اصالۃً صلحاء
اور اہل مروت کا نہیں بلکہ خدا کے دشمنوں کا طریقہ ہے اس سے اجتناب لازم ہے

فقط واللہ سبحانہ تعالیٰ اعلم۔ حررہ العبد محمود غفرلہ



**கேள்வி :** ஆண்கள் தலை திறந்த நிலையில் (தொப்பியில்லாமல்) இருப்பது மார்க்கமுறைப்படி கூடுமா?

**பதில் :** மிக அவசியமான நேரத்தில் தலையைத் திறந்திருப்பது குற்றமில்லை. எனினும், இக்காலத்தில் தலைக்கு எண்ணெய் தடவிச் சீவிச் சிங்காரித்துக் கொண்டு சுற்றித்திரிவது நல்லோர்களின் வழிமுறையல்ல. மாறாக இது அல்லாஹ்வுடைய எதிரிகளின் வழிமுறை. அதனைத் தவிர்த்துக் கொள்வது (தொப்பி, தலைப்பாகை அணிவது) அவசியமாகும். (ஃபதாவா மஹ்மூதிய்யா 5 : 142)

பொதுவாக, முஸ்லிம்கள் என்றாலே அவர்கள் தொப்பியுடன் இருப்பார்கள் என்பது உலக மக்கள் அனைவரின் மனக்கண் முன் தோற்றமளிக்கும் காட்சியாகும். பல மதங்களைச் சேர்ந்த பல மனிதர்களை வரையுமாறு ஓவியர் ஒருவரிடம் சொன்னால், அதில் முஸ்லிமை தொப்பியுடன் தான் வரைவார். இது உலகத்திலுள்ள உண்மையான நடைமுறை.

உலக நடைமுறையிலும் இராணுவத்தினர், காவல்துறையினர் போன்றோர் தங்களை அடையாளங் காட்டுவதற்காக தொப்பிஅணிய வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 'ஹிஜ்புல்லாஹ்' அல்லாஹ்வின் படையினர் என்று அல்லாஹுதஆலா சிறப்பித்துக் கூறிடும் முஃமினான மனிதர்கள் தொப்பியணியாமல் இருப்பது முற்றிலும் தவறான நடைமுறையாகும்.

தொப்பியணிவது முஸ்லிம்களுக்கு உயர்வளிப்பது என்பது மட்டுமல்ல, அது மூளைக்கும் தேவையான சராசரி வெப்பத்தைப் பாதுகாத்து வழங்கிடும் பாதுகாப்புக் கவசமுமாகும். இது உடற்கூறு வல்லுநர்கள் கூறிடும் கருத்து.

எனவே, தொப்பியணிந்து தொழுவது ஒழுக்கமும்

கண்ணியமும் மரியாதையும் நிறைந்த செயலாக இருப்பதுடன் உடல் நலத்திற்கும் சிறந்ததாகும். தொழுகையில் ஒழுக்கத்தையும் கண்ணியத்தையும் கடைப்பிடிப்பது மிக அவசியமானது.

தொப்பி போடாமல் மஸ்ஜிதுக்குத் தொழ வருபவர்கள், ஒருங்கிணைந்து ஒன்றுபட்டு வாழும் ஒரு ஜமாஅத்தின் ஒற்றுமையைச் சீர்குலைப்பவர்களாவார்கள். அனைவரும் தொப்பியணிந்து தொழுகின்ற ஒரு மஸ்ஜிதில் ஓரிருவர் மட்டும் மன முரண்டாகத் தொப்பி போடாமல் தொழுவது அந்த ஜமாஅத்தில் குழப்பத்தை உண்டாக்கி, ஜமாஅத்தின் கட்டுக் கோப்பைக் கெடுப்பதாகவும் இருக்கிறது.

மேலும், தொப்பி அணியாமல் இருப்பது முஸ்லிம் அல்லாதவர்களுடைய பழக்கம். ஒரு முஸ்லிம் தொப்பி அணியாவிட்டால் மற்ற சமுதாயத்தினரைப் போன்றே இவரும் ஆகிவிடுவார். அப்பொழுது இவர், مَنْ تَشَبَّهَ بِقَوْمٍ فَهُوَ مِنْهُمْ 'எவர் (ஏதேனும் ஒரு விஷயத்தில்) மற்ற சமுதாயத்தினருக்கு ஒப்பாக இருக்கிறாரோ அவர் (அவ்விஷயத்தில்) அச்சமுதாயத்தில் உள்ளவர் தான்' என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியுள்ள ஹதீஸுக்கு உரியவராக ஆகிவிடுவார்.

எனவே, தொப்பி என்பது ஒரு முஸ்லிமுடைய ராஜ கிரீடம்! அது எடுக்கப்பட்டால் அவருடைய மதிப்பும் மரியாதையும் எடுக்கப்பட்டுவிடும்! உணர்வுள்ளவர்கள் உணர்வார்களாக!

அல்லாஹு தஆலா தீய உணர்வை விட்டும் அனைவரையும் காத்து நல்லுணர்வைத் தந்தருள்வானாக!

Printed by OLYMPIC OFFSET PRINTERS, Chennai - 1. ✆ 25362340, 25384274